பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 சித்திரை 25 வியாழக்கிழமை (07-05-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர் 161

நல்லூர் பிரதேச நூலகம்
மாநகர சபை மன்றம்
யாழ்ப்பாணம்

# தமிழினத்தின் ஒருமித்த உணர்வை வெளிப்படுத்தியவர் தலைவர் பிரபா

## தனி ஈழத்துக்கு ஜனதா ஆதரவு

சென்னை, மே 7

இலங்கையில் தனியான ஈழத்தை அடையும் நோக்கத்துக்கு ஆதரவு வழங்குவதென ஜனதா கட்சி தமிழ்நாடு பிரிவு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

கட்சியின் வருடாந்த மாநாடு அண்மையில் காஞ்சிபுரத்தில் நடந்த சமயமே இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. [இ-3]

## பல்கலைக்கழக அனுமதி: 70 வீதம் திறமைக்கு இடம்?

பல்கலைக்கழகத்துக்கு மாணவர்களை அனுமதிப்பதில் இப்போதுள்ள விதிமுறையை மாற்றி அமைப்பது குறித்து தற்போது தீவிரமாக ஆராயப்பட்டு வருவதாக அறியப்படுகிறது.

அதன் பிரகாரம் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்படும் மொத்த மாணவர்களில் எழுபதுசத வீதத்தினரையும் திறமை அடிப்படையில் தெரிவு செய்வது குறித்து பல்கலைக்கழக மானிய ஆணைக் குழு சிபார்சு செய்திருப்பதாகத் தெரியவருகிறது.

இது சம்பந்தமாக அமைச்சரவைக்கு யோசனை சமர்ப்பிக்கப் பட்டுவிட்டதாகவும், அதன் அனுமதியை ஆணைக்குழு எதிர்பார்த்திருப்பதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

இப்போது 40சத வீத மாணவர்கள் திறமை அடிப்படையிலும், 45 சத வீத மாணவர்கள் மாவட்ட அடிப்படையிலும், பின்தங்கிய மாவட்டங்களிலிருந்து 15 சத வீத மாணவர்களும் தெரிவுசெய்யப்படுகின்றனர். [அ 3]

## புலிகளுக்கு தடையா? இல்லையா?

## 21 ஆம் திகதிக்கு முன் முடிவு எடுக்க முயற்சிக்கப்படுமாம்

### சவான் நேற்று அறிவிப்பு

புதுடில்லி, மே 7

விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடை செய்ய வேண்டும் என்ற கோரிக்கை சம்பந்தமாக, ராஜீவ்காந்தி நினைவு தினமான எதிர்வரும் 21ஆம் திகதிக்குள் ஒரு முடிவை எடுக்க மத்திய அரசு முயற்சி செய்யும்.

மத்திய உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் முன் கண்டவாறு நேற்று ராஜ்ய சபையில் கேள்வி நேரத்தின் போது தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் நடவடிக்கைகள் பற்றி மத்திய அரசு தகவல்களைத் திரட்டி வருகின்றது என்றும் அதைத் தடை செய்வதா அல்லது இல்லையா என்பது பற்றி மத்திய அரசு விரைவில் முடிவு செய்யும் என்றும் திரு சவான் தெரிவித்தார்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## தினமும் 3 தடவைகள் விமானம் மூலம் அகதிகள்

கொழும்பு மே 7

இந்தியாவில் தற்போது அகதிகளாக தங்கியுள்ள ஈழத்தமிழர்களைத் திருப்பி அனுப்பும் வேலைகள் துரிதப்படுத்தப்பட உள்ளன.

ஒரு நாளில் மூன்று தடவைகள் என்ற அடிப்படையில் வாரம் நான்கு நாட்கள் விமானம் மூலம் அகதிகளை அனுப்ப தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி ஆகிய நாட்களில் சென்னைக்கும் திருகோணமலைக்கும் இடையில் இந்த விமானச் சேவைகள் இடம் பெறும்.

இதேவேளை —

இராமேஸ்வரத்துக்கும் மன்னாருக்கும் இடையில் நடைபெற்று வந்த எம். வி. ராமானுஜம் கப்பல் சேவை கடல் கொந்தளிப்புக் காரணமாக இம்மாதம் 4 ஆம் திகதியுடன் நிறுத்தப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-த)

## மட்டக்களப்புப் பகுதியில் 4 தமிழர் சுட்டுக் கொலை

### உணவுப் பொருள்கள் பறிமுதல்

யாழ்ப்பாணம், மே 7

மட்டக்களப்பு பெரிய புல்லுமலையில் கடந்த சனிக்கிழமை நான்கு தமிழர்கள் ஸ்ரீலங்கா இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

பெரியபுல்லுமலையிலிருந்து 20 மைல்களுக்கு அப்பால் உள்ள கூட்டுறவுக் கடையில் உணவுப் பொருள்களை வாங்கி வந்த தமிழர்களே இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டவர்கள் ஆவர்.

சுட்டுக் கொல்லப்பட்டவர்களிடம் இருந்த உணவுப் பொருள்கள் அடங்கிய பொதிகள் இராணுவத்தினரால் எடுத்துச் செல்லப்பட்டன. 4 சடலங்களும் பற்றைக்காடுகளுக்குள் பின்பு கண்டெடுக்கப்பட்டன. [இ-10]

## முச்சந்தி முரளி



என்ன பாடுபட்டும் கொண்டு வந்து இறக்கிப் போடுறது என்று தான் நிற்கினம்.

## தேசத் துரோகி சுடப்பட்டு மரணம்

யாழ்ப்பாணம், மே 7

மட்டக்களப்பில் தேசத் துரோகி ஒருவர் விடுதலைப் புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

கடந்த திங்கள் மாலை 5 மணியளவில் களுவாஞ்சிக்குடி — பட்டிருப்புச் சந்தியில் வைத்து இவர் சுட்டுக்கொல்லப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. [இ-10]

## ஆப்கானிஸ்தானில் யுத்த நிறுத்தம்

காபூல், மே 7

ஆப்கானிஸ்தானில் இடைக்கால அரசும் ஹெக்மத்தியார் தலைமையிலான தீவிரவாதக் குழுவும் உத்தியோகப் பற்றற்ற யுத்த நிறுத்தம் ஒன்றுக்கு இணங்கியுள்ளன.

கடந்த இரண்டு நாட்களாக காபூல் நகர் மீது ஹெக்மத்தியாரின் படைகள் நடத்திய கடுமையான றொக்கட் தாக்குதல்களில் சுமார் 70 பேர் கொல்லப்பட்டார்கள்.

யுத்த நிறுத்தம் அறிவிக்கப்பட்ட பின்னர் நேற்று நகரில் அமைதி நிலவியது. எவ்வித துப்பாக்கி வேட்டுச் சத்தமும் கேட்கவில்லை. [இ-10]

## யாழ். நிலை குறித்து ஆராயப்படும்

யாழ்ப்பாணம், மே 7

அடுத்த வாரம் கொழும்பில் நடைபெற உள்ள செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் கூட்டத்தில் யாழ் மாவட்ட நிலைமை குறித்தும் ஆராயப்பட உள்ளது.

செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக் குழுவின் வடக்கு—கிழக்கு மாகாண பிராந்திய அதிகாரிகளும் இக்கூட்டத்தில் கலந்து கொள்ள அழைக்கப்பட்டுள்ளனர். (இ-3)

## தமிழிசை பூர்த்தி விழாவில் தமிழேந்தி

யாழ்ப்பாணம், மே 7

எமது மொழியையும் கலைகளையும் வளர்ப்பதற்கான பெருவிழாக்களை நாம் இப்போது சுதந்திரமாக நடத்த முடிகிறது. முன்னரைப் போல வெளியாரின் அனுமதி பெறத் தேவை இல்லை.

இத்தகைய ஒரு நிலை உருவாவதற்கு தமிழினத்தின் ஒருமித்த உணர்வை வெளிப்படுத்தியவர் தலைவர் பிரபாகரன் அவர்களே.

நாம் ஒரு காலத்தில் அடிமைகளாய் இருந்திருக்கிறோம் என்பதும், இன்று நாங்கள் அடிமைகளல்ல என்பதும் இந்த நேரம் போது புரிகிறது. இதற்கு விடுதலைப் புலிகளின் இடைவிடாத தியாகம் கலந்த தொடர் போராட்டமே காரணம்

— இவ்வாறு தெரிவித்தார் தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதிப் பொறுப்பாளர் திரு செ. தமிழேந்தி.

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தினரால் நல்லூரில் கடந்த ஐந்து தினங்களாக நடாத்தப்பெற்ற தமிழிசை விழா நிறைவு நாள் நிகழ்ச்சிகளின்போது சிறப்புரை ஆற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

1974 இல் யாழ்ப்பாணத்தில் நடந்த உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் நடந்த சம்பவங்களை நாம் மறந்துவிட முடியாது. அதனை நடத்துவதற்கு அனுமதி பெற வேண்டி இருந்தது அங்கு தமிழர்கள் உயிர்ப்பலி எடுக்கப்பட்டார்கள்.

தமிழரை உயிர்ப்பலி கொண்ட ஸ்ரீலங்கா அரசுக்கு தமிழினத்தின் ஒருமித்த உணர்வை வெளிப்படுத்திக் காட்டியவர் எமது தலைவர் பிரபாகரன் அவர்களே.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் உயிரிழந்த படையினர் 12 பேர்

யாழ்ப்பாணம், மே 7

வவுனியா நொச்சிமோட்டை மாமடுப்பகுதியில் நேற்று முன்தினம் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் உயிரிழந்த இராணுவத்தினரின் எண்ணிக்கை 12 ஆக அதிகரித்துள்ளது.

9 இராணுவத்தினர் அதே இடத்தில் பலியாகினர். மற்றும் மூவர் மருத்துவமனையில் இறந்தனர்.

இதே வேளை —

வவுனியாவில் பேயாடிக்கூளாங் குளம், நொச்சி மோட்டைப் பகுதிகளில் நேற்று முன்தினம் பகல் தொடக்கம் இரவு வரை தொடர்ந்து கடும் துப்பாக்கிப் பிரயோகம் இடம் பெற்றது என்றும் —

இதில் பல தமிழர்கள் காயமடைந்தனர் என்றும் — தெரிவிக்கப்படுகிறது. (இ-த)

## திடீர் காற்றும் மழையும்

யாழ்ப்பாணம், மே. 7

மாதகல் பகுதியில் நேற்று வீசிய கடும் காற்றினால் வீடுகள் சில சேதமடைந்தன. கூரை சிற்றுகள், மரங்கள் விழுந்து சிலர் காயம் அடைந்தனர்.

நேற்று நண்பகல் சுமார் 11 30 மணி அளவில் வீசிய காற்று சுமார் 20 நிமிட நேரம் நீடித்தது என்றும் அதனைத் தொடர்ந்து பலத்த மழை பெய்தது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவங்களின் போது காயம் அடைந்த இளம் பெண் ஒருவர் நேற்று யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

மயிலிட்டியில் இருந்து இடம் பெயர்ந்து மாதகல் துறைமுகப் பகுதியில் வசித்து வந்த அருந்தவம் ரஞ்சனா [வயது 26] என்பவரே இப்பெண் ஆவார்.

அதேசமயம் நேற்று யாழ். நகரப்பகுதி உட்பட குடாநாட்டின் சில பகுதிகளில் இடிமுழக்கத்துடன் கூடிய பலத்த மழை பெய்தது. [இ-15]

## கைதானோர் குடும்பத்துக்கு சுய தொழில் வாய்ப்பு

யாழ்ப்பாணம், மே 7

படையினரால் கைது செய்யப்பட்டு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளோரின் குடும்பங்களுக்கு சுயதொழில் வாய்ப்பு அளிக்கும் திட்டம் ஒன்றை அரச சார்பற்ற அமைப்புகளின் இணையம் வகுத்துள்ளது.

இத்திட்டத்தை காணாமற்போனோரின் குடும்பங்களுக்கும் விஸ்தரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக யாழ் அரசசார்பற்ற அமைப்புகளின் இணைய வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-3)

## கடற்புலிகளின் வளர்ச்சி மக்களிலேயே தங்கி உள்ளது

### வல்வை விழாவில் சூசை

யாழ்ப்பாணம், மே 7

கடற்புலிகள் அமைப்பு இன்று தவழும் குழந்தை வடிவில் இருக்கிறது. இதனை வளர்த்து ஆளாக்கவேண்டிய பொறுப்பு மக்களுடையது

கடற் கரும்புலிகளான கப்டன் சிதம்பரம், கப்டன் ஜெயந்தன் ஆகியோரின் நினைவாக நடைபெற்ற கூட்டமும், கடல் விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்ச்சியும் நேற்று முன்தினம் வல்வெட்டித்துறையில் நடைபெற்ற போது அதில் கலந்து கொண்டு உரை நிகழ்த்துகையில் கடற் புலிகளின் விசேட தளபதி திரு சூசை மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் காலத்தின் தேவையையும் போராட்டத்தின் தேவையையும் உணர்ந்த தலைவர் பிரபாகரன் விடுதலைப் புலிகளின் கடற் புலிகள் என்ற பிரிவை ஆரம்பித்தார். என்று கூறினார்.

கடற் புலிகளின் அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு மறவன் உரையாற்றுகையில், கடல் ஆதிக்கம் அதிகரித்தால் மட்டுமே விடுதலைப் போராட்டத்தை வென்று முடிக்கலாம் எனக் குறிப்பிட்டார்.

திரு. மறவன் தொடர்ந்து

[6 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

கடைக்குரிய இரு முதிரை அலுமாரிகளும், ஒரு ஷோக் கேசும் விற்பனைக்குண்டு. தொடர்பு: சே. யோகராசா, 49/4, யாழ். றோட், யாழ்ப்பாணம். [ஸ்ரீதர் படமாளிகைப் பின்பக்கம்]
[4840]

[வெஸ்பா] Vespa P-150X விற்பனைக்குண்டு. மண் எண்ணையில் பாவிக்கப்படாதது. நேரில் தொடர்பு கொள்ளவும். [தரகர்கள் இல்லை] கிவீ படப்பிடிப்பாளர்கள், 131/1, அம்பலவாணர் வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம். [20872]

## தவறிவிட்டது

03-05-1992 இரவு ஊரியான் பஸ்தரிப்புக்கும், இயக்கச்சி சந்திக்கும் இடையில் HNB சேமிப்புக் கணக்கு புத்தகம், யாழ். பல்கலைக்கழக அடையாள அட்டை, அல்பம் மற்றும் பொருள்களுடன் பார்சல் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் அ. விமலேந்திரராசா, இல. 14, சிவன் கோவில் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு தயவு செய்து அறிவிக்கவும்.
[20859]

## தேவை

பிரபல்யமான ஸ்தாபனம் ஒன்றுக்கு ஆங்கில அறிவுடைய காசாளர், லிகிதர் தேவை, இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். 10-5-92 இற்கு முன் விண்ணப்பிக்கவும். தொடர்பு; இல. 840, C/o உதயன். [சி/2272]

பிரபல்யமான படப்பிடிப்பு நிலையத்திற்கு பயிலுனர்கள் [Photographic] தேவை. ஆர்வம் உள்ள இருபாலாரும் விண்ணப்பிக்கவும். தொடர்பு: இல. 841, C/o உதயன்.
[சி/2273]

தனியார் மருத்துவமனைக்கு காரியாலய உதவியாளர் தேவை. வயது 25 இற்கும் 45 இற்கும் இடைப்பட்ட 5 வருட காரியாலய அனுபவம் உடைய பெண்கள் விண்ணப்பிக்கலாம். இல. 140, பலாலி றோட், திருநெல்வேலி. [20858]

## மாணவர்களுக்கு

அப்பியாசக் கொப்பி, புத்தகங்கள் மலிவான விலையில் விற்பனையாகின்றன. றோணியோ குறைந்த செலவில், உரிய நேரத்தில் செய்து கொடுக்கப்படும். அறிவகம் புத்தகசாலை, வெலிங்டன் சந்திக்கருகாமை யாழ்ப்பாணம். [சி-2267]

## இலவச திருமண சேவை

35 வயது, பரணி சுவிஸில் பணி புரிபவர், தற்பொழுது யாழ்ப்பாணத்தில் உள்ளார். தகுந்த மணமகள் உடன் தேவை சுவிஸ் அழைத்துச் செல்லலாம். து. விமலா, இலவச திருமண சேவை, யாழ். நாச்சிமார் கோவிலடி.
[4835]

33 வயது, ரோகிணி, பிரபல கொழும்பு Restorent விடுதி உரிமையாளருக்கு ஏற்ற படித்த மணமகள் தேவை. தொடர்பு: ஞாயிறு காலையில் து. விமலா, இலவச திருமண சேவை, யாழ். நாச்சிமார் கோவிலடி.
[4830]

30 வயது, புனர்பூசம், ஜேர்மனியில் தொழில் புரிபவர். இலங்கையில் திருமணம் செய்யலாம். தகுந்த மணப்பெண் தேவை. தொடர்பு: ஞாயிறு காலையில், து. விமலா, இலவச திருமண சேவை, யாழ். நாச்சிமார் கோவிலடி. [4832]

26 வயது, ஆயிலியம், செவ்வாய் 12, ஆசிரியைக்கு றோமன் கத்தோலிக்க, உத்தியோக மணமகன் தேவை. தொடர்பு:ஞாயிறுகாலையில். து. விமலா, இலவச திருமண சேவை, யாழ். நாச்சிமார் கோவிலடி. [4836]

## திருத்தி வாசிக்கவும்

3-5-92 உதயன் இதழில் பிரசுரமான நன்றி நவிலல் விளம்பரத்தில்—

ஸ்வாமி சர்மா இந்திராக்ஷி அம்மா என்ற பெயர் சின்னஸ்வாமி சர்மா இந்திராக்ஷி அம்மா என்றிருந்திருக்க வேண்டும். திருத்தி வாசிக்கவும்

## தபால் பொதிகள் குமாரியில் வரும்

யாழ்ப்பாணம், மே 7

திங்கள் பருத்தித்துறைக்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படும் ''குமாரி'' கப்பலில் தபால் பொதிகளும் எடுத்து வரப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது [உ-3]

## திருட்டு

தென்மராட்சி, மே 7

மீசாலை வாகையடிச் சந்தியில் உள்ள கடை ஒன்று கடந்த திங்கள் இரவு திருடர்களின் கைவரிசைக்கு இலக்கானது.

பால்மா, சிகரெட், சவர்க்கார வகைகள் மற்றும் இனிப்பு வகைகள் திருடப்பட்டுள்ளதாக காவல் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.
(ஓ-117)

## மக்னெற் இன்ஸ்ரிரியூற்

செங்குந்தா ஒழுங்கை,
கல்வியன்காடு

**O/L 92** [Dec.] புதிய பிரிவு

ஆரம்பம்; 09 - 05 - 1992
காலை 9 மணி

| | | |
|---|---|---|
| விஞ்ஞானம் | — | J. R ஞூரி |
| கணிதம் | — | வாமதேவன் |
| சமூகக்கல்வி | — | சோமி |
| வர்த்தகம் | — | இராஜன் |
| ஆங்கிலம் | — | சத்தியபாலன் |
| தமிழ் | — | துரைராஜா |

(இ/1989)

சகல விதமான
அச்சுவேலைகளையும்
கவர்ச்சிகரமாக
செய்வதற்கு

நாடுங்கள்

V

# உதயன்

292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(சி-2242)

## COMPUTER PROGRAMMING IN BASIC LANGUAGE

4 MONTHS
சனி, ஞாயிறு வகுப்புகள்

ஆரம்பம்; 09 - 05 - 1992
8 - 30 மணி

Lectures By- S P. SIVAPATHASUNDARAM
M. I. D. P. M. [Lond.]

★ இலவச அச்சடித்த பாடக் குறிப்புகள்
★ கூடிய செய்முறைப் பயிற்சி
★ பயிற்சி முடிவில் பெறுமதிவாய்ந்த சான்றிதழ்

C.I.M.A | Stage I, I.A B. (All stages)
விரைவில் ஆரம்பமாகவுள்ளன.

## SCHOOL OF BUSINESS ADMINISTRATION

(Pioneers in Computer Education)
16, 3rd. CROSS STREET,
JAFFNA. (சி/2266)

## புற்றுநோய் பற்றிய அறிவித்தல்

அண்மைக்காலங்களில் எமது பகுதிகளில் பலர் இந் நோயினால் பாதிப்படைந்துள்ளனர். தற்போதைய புற்றுநோய் பற்றிய அறிவை நாம் பயன்படுத்தினால் 70% மான புற்று நோயைத் தடுக்கவும், பூரண சுகமாக்கவும் முடியும்.

### புற்றுநோயின் ஆரம்ப அறிகுறிகள்

1. ஆறாத புண் - குறிப்பாக வாய், தொண்டைப் பகுதி.
2. உடல் துவாரங்களிலிருந்து அசாதாரண குருதி ஓட்டம்/நீர்க்கசிவு.
3. மார்பகத்தில்/உடலில் அசாதாரண கட்டி உண்டாகுதல்.
4. தொடர்ச்சியான அஜீரணம் அல்லது உணவு விழுங்க முடியாதிருத்தல்.
5. உடலில் உள்ள மறு அல்லது மச்சத்தில் மாற்றம் ஏற்படுதல்.
6. தொடர்ச்சியான இருமல் அல்லது தொண்டை கரகரப்பு.
7. மலசலம் கழிக்கும் பழக்கத்தில் ஒரு மாற்றம் ஏற்படுதல்.
8. காரணம் கண்டுகொள்ள முடியாத தேக மெலிவு.

மேற் குறிப்பிட்ட அறிகுறிகள் தென்பட்டால் உடன் வைத்திய ஆலோசனை பெறுதல் அவசியம்.

வடமாகாண புற்றுநோய்-
தடுப்புச் சங்கம்.

இல. 107, கஸ்டி வீதி.
யாழ்ப்பாணம்.
05-05-1992 (சி/1988)

# ஊர்காவலர்கள் குறித்து படையினர் விசேட கவனம்

காத்தான்குடி, ஏறாவூர் பகுதிகளில் உள்ள ஊர்காவல் படையினர் கிராம அந்தந்தப் பிரதேச எல்லைகளைத் தாண்டி வெளியே செல்லாமல் இருக்க படையினர் நடவடிக்கை எடுப்பர்.

மட்டக்களப்பு செயலகத்தில் நடந்த கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

அமைச்சர் ஏ. ஆர். மன்சூர் கூட்டிய இந்தக் கூட்டத்தில் படை அதிகாரிகள் மேற்படி முடிவுக்கு சம்மதம் தெரிவித்தனர்.

மஞ்சந்தொடுவாய்,கர்பலா கிராமங்களில் தமிழ், முஸ்லிம் மக்களை மீளக்குடியமர்த்த நடவடிக்கை எடுப்பது எனவும் முடிவாகியது.
[ஓ-3]

## 'கம்உதாவ' வவுனியாவில்?

வவுனியா, மே 7

அடுத்த ''கம்உதாவ'' நிகழ்ச்சி வவுனியாவில் நடைபெறலாம் என்றும், இது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருவதாகவும் தெரிய வருகிறது.

வடமாகாணத்தில் இதுவரை ''கம்உதாவ'' வைபவம் நடைபெறவில்லை.
(ஓ)

நல்லூர் பிரதேச சபை

## முக்கிய அறிவித்தல்

கட்டாக்காலி நாய்களைப்
பிடித்து அழித்தல்

நல்லூர் பிரதேச சபையின் நிர்வாக பிரதேச எல்லைக்குள் உள்ளவர்கள் தங்கள் நாய்களைக் கட்டி வளர்க்க வேண்டும் என்பதையும், கட்டாக்காலியாக வீதிகளில், ஒழுங்கைகளில், பொது இடங்களில் திரியும் நாய்கள் இதற்கென இச்சபையால் நியமிக்கப்பட்ட ஊழியர்களால் பிடிக்கப்பட்டு அழிக்கப்படும் என்பதையும் அத்துடன், கட்டிவளர்க்கப்படும் நாய்களுக்கு இச்சபையில் உத்தரவுப்பத்திரம் பெறப்படல் வேண்டும் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஆ. மகாலிங்கம்,
விசேட ஆணையாளர்,
நல்லூர் பிரதேச சபை.

நல்லூர் பிரதேச சபை,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம். [சி-1990]

## தசாக கிருகயக்ஞ அழைப்பு

### பிரம்மஸ்ரீ சீனிவாசகக் குருக்கள் பாஸ்கரக்குருக்கள்

இக்கம், அல்வாய் மேற்கைச் சேர்ந்த பாஸ்கரக் குருக்கள் 1-5-92 சிவபதமடைந்து விட்டார். இவர் காலஞ்சென்ற பிரம்மஸ்ரீ சீனிவாசகக் குருக்கள் - இராசம்மா ஆகியோரின் மூத்த புதல்வரும் குலரத்தினம்மாவின் அன்புக் கணவரும், சிவசர்மா, சிவசேதி ஆகியோரின் அன்புத் தந்தையும், மகாதேவியின் அன்பு மாமனாரும், நல்லைக்குமரனின் அன்புப் பேரனாரும், தேவநாயகி அம்மா, காலஞ்சென்ற சிவகடாட்ச சர்மா, சிவானந்த ஐயர், அம்பிகாபதி ஐயர் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார். இவருடைய தசாக கிருகயக்ஞ கிரியைகள்:

| | | |
|---|---|---|
| ஞாயிற்றுக்கிழமை | 10-5-92 | தசாகம் |
| திங்கட்கிழமை | 11-5-92 | சபிண்டீகரணம் |
| செவ்வாய்க்கிழமை | 12-5-92 | ஏகோதிஷ்டம் |
| புதன்கிழமை | 13-5-92 | கிருகயக்ஞம் |

தகவல்:
பா. சிவசர்மா
[மகன்]

அல்வாய் மேற்கு, அல்வாய்,
இக்கம் [20869]

## விசேட அறிவித்தல்

கைத்தொழில் பொதுத் தொழிலாளர்-
சங்கம்

லங்கா சிமெந்து நிறுவனக் கிளையின்
விசேட பொதுச்சபைக் கூட்டம்

**இடம்:**
லங்கா சிமெந்து நிறுவனத் தற்காலிகக் காரியாலயம், சுன்னாகம்.

**காலம்:**
09-05-1992.

**நேரம்:**
காலை 9-30 மணியளவில்.

விசேட பொதுச்சபை கூட இருப்பதால், சங்க அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளும்படி அறியத்தருகிறேன்.

-பதில் காரியதரிசி.

சுன்னாகம். [20562]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்



## இந்தியாவில் இருந்து இங்கு வந்த

# அகதிகள் சொந்த இடங்களுக்கு திரும்ப அனுமதி இல்லை

வவுனியா, மே 7

இந்தியாவிலிருந்து தாயகம் திரும்பி நாட்கள் பல ஆகி விட்டன. ஆனால் நாம் எமது சொந்த இடங்களுக்குச் செல்ல அதிகாரிகள் அனுமதிக்கிறார்கள் இல்லை.

தாண்டிக்குளம் பகுதியிலுள்ள அகதி முகாமிலுள்ள அகதிகள், புனர்வாழ்வு, புனர்நிர்மாணத்துறை அமைச்சுச் செயலாளர் திரு. கிறிஸ்ரி சில்வாவிடம் இவ்வாறு முறையிட்டனர்.

அண்மையில் வவுனியாவுக்கு திரு. கிறிஸ்ரி சில்வாவும் மற்றும் அமைச்சு அதிகாரிகளும் விஜயம் செய்திருந்தனர்.

அவ்வேளை தாண்டிக்குளம் பகுதி அகதி முகாமுக்கும் அவர்கள் திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டனர்.

இந்தியாவில் இருந்து தாயகம் திரும்பிய பல நூற்றுக்கணக்கான அகதிகள் தற்சமயம் இந்த முகாமில் தங்கியுள்ளனர்.

இவர்கள் தமது சொந்த இடங்களான முல்லைத் தீவு, கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணப் பகுதிகளுக்கு திரும்பிச் செல்ல அனுமதியின்றி அங்கேயே தங்கியுள்ளனர்.

அச்சமயம் அகதிகள் அமைச்சுச் செயலாளரிடம் பல்வேறு முறைப்பாடுகளைத் தெரிவித்தனர் தமது சொந்த இடங்களுக்கு திரும்பிச் செல்ல அனுமதியளிக்கும் படி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுக்குமாறும் அவர்கள் அமைச்சுச் செயலாளரிடம் கேட்டுக் கொண்டனர்.

இதேசமயம்—

தாண்டிக்குளம், வேப்பங்குளம் அகதி முகாம்களில் இட நெருக்கடி நிலவுவதாகவும், தரமான உணவு வழங்கப்படுவதில்லை எனவும் அங்குள்ளவர்கள் முறையிட்டனர் (ஒ)

## ஐ. நா. வின் மதிப்பீடு இது

# ஐந்து லட்சம் குழந்தைகள் இங்கு யுத்தத்தினால் பாதிப்பு!

இலங்கையில் அரசுப்படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடைபெற்று வரும் யுத்தம் காரணமாக 4 லட்சத்து 87 ஆயிரம் குழந்தைகள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று ஐ. நா. குழந்தைகள் நல நிதியம் மதிப்பிட்டுள்ளது.

இக் குழந்தைகளில் பலர் பெற்றோரை இழந்து அனாதைகள் ஆகியுள்ளதாகவும் உற்றார், உறவினர்களால் கைவிடப்பட்டு துன்பத்திற்கு ஆளாகியிருப்பதாகவும் ஐ. நா. குழந்தைகள் நல நிதியத்தின் நிர்வாக இயக்குநர் திரு. ஜேம்ஸ் கிராண்ட் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

எனினும் இலங்கையில் குழந்தைகளின் இறப்பு விகிதம் பாராட்டுமளவிற்குக் குறைந்துள்ளதாகவும் அவர் சொன்னார்.

1981 இல் 1000 குழந்தைகளுக்கு 50 ஆக இருந்த இறப்பு விகிதம், 1987 ஆம் ஆண்டில் 35 ஆகக் குறைந்துள்ளது என்றும் திரு. கிராண்ட் சொன்னார். (அ-எ)

## இந்து மகளிர் கல்லூரியில் பாராட்டு விழா

யாழ்ப்பாணம், மே 7

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் ஜி. சீ. ஈ. சாதாரண தரப் பரீட்சையில் அதி சிறப்பாகச் சித்தி அடைந்த மாணவிகள் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினால் பரிசு வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட உள்ளனர்.

இது தொடர்பான வைபவம் நாளை வெள்ளி காலை 8-00 மணிக்கு நடைபெற உள்ளது.

இந்த வைபவத்தில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் கோட்டக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. வேலாயுதமும் சிறப்பு விருந்தினராக யாழ் பல்கலைக்கழக பதிவாளர் திரு. க. பரமேஸ்வரனும் கலந்து கொள்வார்கள். [இ]

## ஏகாதச ருத்திரா அபிசேகம்

வண்ணை சிவன்கோவிலில் இன்று மணவாளக் கோலத் தினத்தன்று ஏகாதச ஸ்ரீ ருத்திராபிசேகம் நடைபெறுகிறது.

மகாநியாச ஏகாதச ஸ்ரீருத்திரா பாராயணத்தோடு கூடிய இந்த ஏகாதச ருத்திரா அபிசேகம் மிகவும் சிறப்புடையதாகும்.

இங்கே பதினொரு சிவாச்சாரியர்கள் ஒன்றாக இருந்து, 11 வேதிகைகளில் கும்பங்களை ஆவாகனம் செய்வதோடு பாராயணமும் நடைபெறும். இந்தச் சிறப்பு அபிஷேகம் இப்பகுதியில முதன் முறையாக இங்கு நடைபெறவுள்ளது.

இவ்வபிஷேகம் நாளையும் நடைபெறும். இவ்விரு நாட்களிலும் இலட்சார்ச்சனையும், பஞ்சமுகார்ச்சனையும் நிகழும். [அ]

## உற்சவங்கள்

சாவகச்சேரி நுணாவில் மேற்கு விளைதேனி வீரகத்தி விநாயகர் கோவில், சுன்னாகம் திருக்குடவாயில் ஸ்ரீ விஸ்வநாத் சுவாமி கோவில், வண்ணை ஸ்ரீ விஸ்வலிங்கப் பிள்ளையார் கோவில், கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோவில், உருப்பிராய் பருவதவர்த்தினி அம்மன் கோயில், வரணி வடக்கு கும்பிட்டான் புலம் கற்பக விநாயகர் கோவில், அருள்மிகு வலாம்பிகா சமேத விசுவலிங்க வைத்தீஸ்வர சுவாமி கோவில் ஆகியவற்றின் வருடாந்த மஹோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றன.

★ ★ ★

சுன்னாகம் கிழக்கு சொர்ணவரத காளி அம்பாள் வருடாந்த சங்காபிஷேகம் [illegible] நடைபெறும்.

(த-89-31-170)

---

சகல கொத்தணி அதிபர்கள் கவனத்திற்கும்

பாடசாலை மாணவர்களுக்கான

# கட்டுரைப் போட்டி

உதயன் வெளியீட்டகத்தினர் யாழ். பல்கலைக்கழகத்தின் அனுசரணையுடன் கட்டுரைப் போட்டி ஒன்றை நடத்துவதாக அறிவித்துள்ளனர்.

இந்தப் போட்டியில் கொத்தணி மட்டத்தில் தகுதியான மாணவர்களைத் தெரிவு செய்து பங்கு கொள்ள வைப்பதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

உங்கள் கொத்தணியின் கீழ் உள்ள சகல பாடசாலைகளிலும் ஒரு பூர்வாங்கத் தேர்வு நடத்தி தகுதியான மாணவர்களைத் தேர்ந்தெடுத்து கோட்டக் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

ஆண்டு 9, 10, 11 மாணவர்கள் ஒரு பிரிவாகவும், ஆண்டு 12, 13 மாணவர்கள் மற்றொரு பிரிவாகவும் தேர்வு நடத்தப்பட வேண்டும்.

போட்டியில் கீழ்க் காணும் விடயப்பரப்புகளில் கட்டுரைகள் எழுதப்பட வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

1. தமிழ் 2. வரலாறு
3. சமூகவியல் 4. பொருளியல்
5. கல்வி / கலை / விஞ்ஞானம்

ஒவ்வொரு பிரிவிலும் கொத்தணி மட்டத்தில் முதல மூன்று இடங்களைப் பெறும் மாணவர்கள் தெரிவு செய்யப்பட வேண்டும். தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் நேரில் தோற்ற வேண்டிய இறுதித் தேர்வு நடைபெறும். இடமும் திகதியும், பின்னர் அறிவிக்கப்படும்.

கொத்தணி மட்டத்தில் தெரிவான மாணவர்களுக்குச் சான்றிதழ் வழங்கப்படுவதோடு, முதலாம் இடத்தைப் பெறும் மாணவருக்கு பெறுமதியான பரிசிலும் உதயன் நிறுவனத்தாரால் வழங்கப்படும்.

தெரிவான மாணவர் பெயர் விவரங்களை மே மாதம் 20ஆம் திகதிக்கு முன்னர் கோட்டக் கல்வி அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கவும்.

1. சி. வேலாயுதம். கோ. க. ப. யாழ்ப்பாணம்
2. இ. சிவானந்தம், கோ. க. ப. மருதனார்மடம்.
3. சி, வே, மகேசவேலு, கோ. க. ப. பண்டத்தரிப்பு.
4. சி. புலேந்திரன், கோ. க. ப. வேலணை.
5. பொ. சிவகுருநாதன், கோ. க. ப. சாவகச்சேரி
6. செ. செல்லத்துரை, கோ. க. ப. பருத்தித்துறை.

---

# தமிழ் ஆர்வலர்களுக்கோர் அரிய சந்தர்ப்பம்!

உதயன் வெளியீட்டகத்தினர் யாழ். பல்கலைக்கழகத்துடன் இணைந்து நடத்தும்

## ★ மாபெரும் கட்டுரைப் போட்டி ★

உங்கள் பரந்த அறிவைப் பெருக்கவும்
உங்கள் திறமை வெளிப்படவும்
இதோ ஓர் அரிய சந்தர்ப்பம்!

போட்டி அமைப்பு :

★ பாடசாலை மாணவர்களுக்கான போட்டி இரு பிரிவுகளாக, இரண்டு நிலைகளில் நடத்தப்படும்.

★ சகலரும் பங்குபற்றும் மற்றொரு பொதுப்போட்டி.

ஒவ்வொரு பிரிவிலும்,

முதலாம் பரிசு: தங்கப் பதக்கம்
இரண்டாம் பரிசு: ரூ. 1,000-00
மூன்றாம் பரிசு: ரூ. 500-00

மற்றும் ஆறுதல் பரிசுகள்.

கொத்தணி மட்டத்தில் முதலாம் இடம் பெறும் மாணவர்களுக்குப் பெறுமதியான நூல்கள் பரிசாக வழங்கப்படும்.

பரிசு பெறுவோர் அனைவருக்கும் சான்றிதழ் வழங்கப்படும்.

1. பாடசாலை மாணவர்களுக்கான போட்டி

முதலாவது நிலையில் கோட்டக்கல்வி அதிகாரிகளால் கொத்தணி மட்டத்தில் நடத்தப்படும்.

இரண்டாவது நிலையில் கொத்தணியிலிருந்து தெரிவான மாணவர்களுக்குக் குறிப்பிட்ட ஒரு தினத்தில் இறுதிப் பரீட்சை நடத்தப்படும். இப் பரீட்சைக்கு மாணவர்கள் நேரில் தோற்ற வேண்டும்.

2. பொதுப் போட்டி

★ போட்டியிற் பங்குபற்ற —
கீழ்க்காணும் தலைப்புக்களில் ஏதேனும் ஒன்றைப் பற்றி கட்டுரை எழுதி அனுப்பவேண்டும்.

**தலைப்புகள்:**

1. தமிழர் பிரதேச மூலவளங்கள்
2. ஈழத் தமிழரின் பண்பாட்டுக் கோலங்கள்
3. இன்றைய ஈழத்துத் தமிழ்க் கவிதை
4. பொருத்தமான தொழில் நுட்பம்
5. நெருக்கடி நிலையும் வெகுசனத் தொடர்பு சாதனங்களும்

**போட்டி விதிகள்:**

(i) கட்டுரை 800 சொற்களுக்கு மேற்படாமல் இருக்கவேண்டும்.
(ii) ஒருவர் ஒரு கட்டுரை மட்டுமே அனுப்பலாம்.
(iii) கட்டுரையில் எழுதுபவரின் பெயர், முகவரி எழுதப்படல் ஆகாது.
(iv) கீழே பிரசுரமாகும் கூப்பனை நிரப்பி கட்டுரையுடன் இணைத்து அனுப்பவேண்டும்.
(v) கடித உறையின் இடது மேல் மூலையில் "கட்டுரைப் போட்டி" எனத் தவறாது குறிப்பிடவும்.
(vi) கட்டுரைகள் 15-05-1992 க்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படவேண்டும்.
(vii) கட்டுரைகளை மூடிய கடித உறையில் உதயன் காரியாலயத்தில் நேரிலும் ஒப்படைக்கலாம். தபாலில் அனுப்புவோர், ஆசிரியர், உதயன் பணிமனை, 292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பவேண்டும்.
(viii) போட்டிக்கு அனுப்பப்படும் கட்டுரைகளைப் பிரசுரிக்கும் உரிமை உதயனுக்கே உரியது. கட்டுரைகள் திருப்பி அனுப்பப்படமாட்டா.
(ix) யாழ். பல்கலைக்கழக நடுவர் குழு பரிசுக்குரிய கட்டுரைகளைத் தேர்ந்தெடுக்கும். நடுவர் குழுவின் தீர்ப்பே இறுதியானது.

குறிப்பு:- போட்டிகள் தொடர்பாக எவ்விதக் கடிதத் தொடர்பும் வைத்துக் கொள்ளப்படமாட்டாது.

---

## உதயன் கட்டுரைப் போட்டி - 1992

கட்டுரைத் தலைப்பு: ..............................

முழுப் பெயர்: ..............................

முகவரி: ..............................

..............................

இக் கட்டுரை எனது சொந்தப் படைப்பு என்பதை இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

..............................
கையொப்பம்

திகதி: ..............................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விசாரணை முடிவு

ராஜீவ் காந்தி கொல்லப்பட்ட தினம் அவருக்கு வழங்கப்பட்ட பாதுகாப்பு ஏற்பாடுகளில் இருந்ததாகக் கூறப்படும் குறைபாடுகள் பற்றி விசாரணை நடத்தி வந்த நீதியரசர் வர்மா தலைமையிலான தனிநபர் ஆணைக்குழு தனது விசாரணைகளை கடந்த திங்கட்கிழமை முடித்துக் கொண்டது.

ஆணைக்குழு தனது அறிக்கையை அடுத்த மாத மத்தியினுள் சமர்ப்பிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

---

## புதிய உயர் கல்லூரி

[New College of High Studies]

ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

**A/L 92**
**DAY CLASSES**
பிரிவு - II
வினா - விடை
வகுப்புகள்
ஆரம்பமாகிவிட்டன.

**A/L 92**
சனி — ஞாயிறு
வினா - விடை வகுப்பு
ஆரம்பம்:
17 — 05 — 1992

**A/L 93 & 94**
புதிய பிரிவு
ஆரம்பம்:
16 — 05 — 1992
7 மணி

**SPOKEN ENGLISH**
*By: BRITTO*
புதிய பிரிவு ஆரம்பம்:
09 — 05 — 1992
9 மணி

(சி-2275)

---

## BITSMANS

கல்வி நிறுவனம், மானிப்பாய்.

# A/L 92

★ அளவையியல் ★

1. குறியீட்டு அளவையியல்
2. பகுதி II
3. 93/94 புதிய பிரிவு

ஆசிரியர்:
திரு. எஸ். எஸ். மனோகரன் B Com.

ஆரம்பம்: 09-05-1992
சனி — மாலை 5-00 p.m.

(சி-2269)

---

## சன்மார்க்கசபை
குரும்பசிட்டி



சன்மார்க்க சபைத் தலைவரும், வடமாநில சித்திர பாடப் பிரதிக் கல்விப் பணிப்பாளரும், கலாகேசரி கலாலய இயக்குனரும், சித்திர, சிற்பக் கலை குருமான,

கலாகேசரி
### ஆ. தம்பித்துரையின்
### மணிவிழா

இடம்:- கம்பன் கோட்டம், நல்லூர்.
காலம்:- **09-05-92** சனிக்கிழமை காலை 9-00 மணி
தலைமை:- கலைப் பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை
வாழ்த்துரைகள்;- மகாராஜஸ்ரீ. சு. து. சண்முகநாதக் குருக்கள், சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, பரமேஸ்வரா முன்னாள் அதிபர் எஸ். சிவபாதசுந்தரம், கலாநிதி சி க. சிற்றம்பலம், இரா. சுந்தரலிங்கம், ஆ. மகாலிங்கம், செம்பியன் செல்வன்.
மணிவிழாச் சிறப்புரை:- கலாநிதி சோ. கிருஸ்ணராஜா

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

க. விஸ்வநாதன்,
பிரசாரசெயலாளர்.

(20854)

---

## அலங்கார உற்சவ காலத் தொடர் விரிவுரை
### "கந்தன் கருணை"

இடம்: வண்-வடமேற்கு கோட்டையம்பதி-
ஸ்ரீ சிவசுப்பிரமணியர் தேவஸ்தானம்.
காலம்: 07-05-1992 வியாழன் தொடக்கம்
17-05-1992 ஞாயிறு வரை
நேரம்: இரவு 7 மணி தொடக்கம் 8 மணி வரை
நிகழ்த்துபவர்:
நல்லைக் குருமணியின் பிரதம சிஷ்யன்
"கான கதா வாரிதி"
கந்தர்மடம்-
**பிரம்மஸ்ரீ சிவ. வை நித்தியானந்த சர்மா**
(சிறந்த பக்கவாத்திய சகிதம் நிகழ்த்தப்படும்)
— முருகன் அடியார்கள்.

(20878)

---

## 31 ஆம் நாள் நினைவலைகள்



உதயம்: 25 — 09 — 1938
அஸ்தமனம்: 07 — 04 — 1992

அமரர்
### சுப்பிரமணியம் தவசுப்பிரமணியம்
[வடமராட்சி - ஆர். வி. ஜி. பீடி பிரதிநிதி]

திதி: 07-05-1992

திங்கள் ஒன்று ஓடியதே அப்பா! உங்கள் பிரிவால் நீராடும் கண்களில் நிழலாடும் நின் உருவம், கணப்பொழுதில் உங்கள் உயிரை எமைவிட்டு பிரித்தெடுக்க காலமும் துணிந்ததோ! இறைவா நீயும் இணைந்தாயோ! கொட்டுகின்ற கண்ணீர்த் துளிகள் எம் ஆத்மாவின் அர்ச்சனைப் பூக்கள். கொட்டுகின்றோம், அத்தனையும் உங்கள் கமலபாதங்களில்.

உங்கள் ஆத்மா சாந்திவடையட்டும்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரிவால் துயருறும்;
மனைவி, மகள், மகன்மார்,
மருமகன், சகோதரி, உற்றார்,
உறவினர், நண்பர்கள்.


'ரஜனி மஹால்',
அண்டாவளவு வடக்கு,
வல்வெட்டித்துறை

(20860)

---

## மரண அறிவித்தலும் அந்தியேட்டி-வீட்டுக்கிருத்திய அழைப்பும்





**திரு. மயில்வாகனம் செல்வத்துரை**
(உடையார்)
[வல்லிபுர ஆழ்வார் ஆலய பரிபாலகர்]
தோற்றம்: 08 — 09 — 1901
மறைவு: 16 — 05 — 1972

**திருமதி செல்வத்துரை தங்கம்மா**
தோற்றம்: 19 — 08 — 1916
மறைவு: 09 — 04 — 1992

திருமதி செல்வத்துரை தங்கம்மா 09 - 04 - 1992 சிவபதமடைந்து ஈமக்கிரியைகள் உடன் நடந்தேறின.

அன்னாரின் அந்தியேட்டி, வீட்டுக்கிரியைகள் நிகழும் ஆங்கீரச வருட சித்திரை மாதம் 27 ஆம் நாள் (09 - 05 - 1992) சனிக்கிழமை காலை எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால், அத்தருணம் உறவினர்கள், நண்பர்கள், சுற்றத்தார் அனைவரும் குடும்ப சகிதம் வருகை தந்து, ஆத்ம சாந்திப் பிரார்த்தனை மற்றும் சபிண்டீகரணக் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மகன், மருமகன், பேரப்பிள்ளைகள்.

துன்னாலை தெற்கு.
கரவெட்டி.

(20861)

---

விண்ணக வாழ்வின்
## 31 ஆம் நாள் நினைவாக



உதயத்தில்: 18 — 03 — 1939
இதயத்தில்: 07 — 04 — 1992

### அமரர் லோறன்ஸ் ஜோசவ் பெனடிக்ற்
[ஆசிரியர் - ஐக்கிய சங்க பாடசாலை, சுழிபுரம்]

எங்களை விட்டகன்று நீங்கள்
யேசுவோடு வாழுகின்றீர்!
உங்களது பரிந்து பேசல்
எங்களுக்கு வாழ்வு தரும்!

அன்னாரின் பிரிவை எண்ணி, வருகை தந்த அருட் தந்தையர்கள் - அருட்சகோதரிகள், ஆசிரியர்கள், மாணவர்கள், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எம் இதயம் நிறைந்த நன்றிகள்!

— குடும்பத்தினர்.

"பெஸ்",
சில்லாலை,
பண்டத்தரிப்பு.

[4815]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## உதயன்

### யாருக்கு நட்டம்?

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடை செய்வது சம்பந்தமாக இந்திய மத்திய அரசுக்கும், தமிழகத்தின் ஜெயலலிதா அரசுக்கும் இடையில் பெரும் கருத்து மோதல் ஏற்பட்டிருக்கிறது.

விடுதலைப் புலிகள் இயக்கம் இந்தியாவில் போராட்டம் நடத்தும் இயக்கமல்ல. அது ஈழத்தமிழர்களின் தாயகத்தை மீட்டெடுக்கவும், அவர்களுக்கென பூரண இறைமையுள்ள தன்னாட்சி அரசை உருவாக்கவும் ஈழத்தமிழ் மண்ணிலேயே போராடி வரும் இயக்கம்.

1991 ஜூனில் தமிழகத்தில் பதவிக்கு வந்த ஜெயலலிதா, விடுதலைப்புலிகளை ஒரு சாட்டாக வைத்து தனது அரசியல் எதிரிகளைப் பழிவாங்கத் திட்டம் போட்டார். அந்தத் திட்டத்தின் விளைவே விடுதலைப் புலிகளைத் தடை செய்ய வேண்டும் என்ற அவரது கோரிக்கை.

விடுதலைப் புலிகளைத் தடை செய்தால், தனக்குப் போட்டியாக உள்ள, தனது அரசியலுக்கு ஆபத்தானவர்கள் எனக் கருதப்படும் அரசியல் தலைவர்களையும் மற்றும் ஆதரவாளர்களையும் விடுதலைப் புலிகளுடன் தொடர்புள்ளவர்கள் எனக் கூறி வெகு சுலபமாகப் பழிவாங்கவும், தண்டிக்கவும் வாய்ப்பாகும் என்பது ஜெயலலிதாவின் உள்நோக்கம்.

இது விடயத்தில் தமது சொந்த நலன் கருதி காங்கிரஸின் தமிழகத் தலைவர்களும் ஜெயலலிதாவுக்குத் துணை போக முன் வந்திருக்கின்றனர். அதன் விளைவும் செல்வாக்குமே இந்திரா காங்கிரஸ் மாநாட்டில் புலிகளைத் தடை செய்யக் கோரி இயற்றப்பட்ட தீர்மானம்.

ஆனால் மத்திய அரசு இது விடயத்தில் வெகு கவனமாக இருக்கிறது என்பது ஆரம்பத்திலிருந்தே தெரிந்த விடயம். தமிழகக் காங்கிரஸ் ஆதரவாளர்களையும், ஜெயலலிதா அரசையும் சற்றுச் "சாந்தப்படுத்துவதற்காக" தடைசெய்யும் விவகாரம் ஆராயப்படுவதாகவும், விரைவில் முடிவு எடுக்கப்படும் என்றும் அரசுத் தலைவர்கள் கூறிவந்தனர்.

திருப்பதியில் நடந்த இந்திரா காங்கிரஸ் கட்சி மாநாடு முடிந்து, புதுடில்லி திரும்புகையில் சென்னையில் இதுகுறித்து கருத்துத் தெரிவித்த பிரதமர் நரசிம்மராவ், வெகு கவனத்துடன் அளந்து தான் பேசினார்.

இப்போது உள்துறை அமைச்சர் சவான், புலிகள் இயக்கத்தைத் தடை செய்வதற்கும் போதிய ஆதாரங்கள் இல்லை என்று தெரிவித்திருக்கிறார். இது ஜெயலலிதாவுக்கும், தமிழக காங்கிரஸ் தலைவர்களுக்கும் பெரும் ஏமாற்றத்தைத் தந்திருக்கிறது. ஆத்திரத்தை ஊட்டியிருக்கிறது.

விடுதலைப்புலிகளைத்தடை செய்வதால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களை மத்திய அரசு உள்ளூர உணர்ந்திருப்பதாகத் தோன்றுகிறது. புலிகளைத் தடை செய்தால் தமிழகம் இன்னொரு பஞ்சாப்பாக, காஷ்மீராக, அஸாமாக ஒரு சில மாதங்களிலேயே மாறிவிடலாம் என்ற அச்சத்தினால் மத்திய அரசு தயக்கம் காட்டுகிறது எனலாம்.

மத்திய அரசின் இந்த நிலைப்பாடு உண்மையானதோ, இல்லையோ, புலிகளைத் தடை செய்தால் நட்டம் இந்தியாவுக்கே அன்றி ஈழத்தமிழர்களுக்கு அல்ல என்பதே அரசியல் வித்தகர்களின் கணிப்பாகும்.

வடக்கு - கிழக்கிலுள்ள

# உள்ளூராட்சி சபைகளுக்கு நன்கொடை நிதி இரட்டிப்பு!

யாழ்ப்பாணம், மே 7

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் உள்ள உள்ளூராட்சிச் சபைகளுக்கு மாகாணம் வழங்கப்படும் நன்கொடை நிதி இரட்டிப்பாக்கப்பட்டுள்ளது.

மாகாண உள்ளூராட்சி அமைச்சு ஆணையாளர் இது தொடர்பான பணிப்புரையை நிறைவேற்றுமாறு விடுத்துள்ளார்.

வாழ்க்கைச் செலவு உயர்வு காரணமாக ஊழியர்களின் சம்பளங்கள் மற்றும் கொடுப்பனவுகளை வழங்கமுடியாத நிலையில் உள்ளூராட்சி சபைகள் நிதி நெருக்கடியில் சிக்கி இருந்தன.

இந்த நிலையை கருத்திற்கொண்டே உள்ளூராட்சி சபைகளுக்கான நிதியை ஆணையாளர் இரட்டிப்பாக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. [ஒ-3]

## விமான நிலையம் செல்லும் வாகனங்கள் சோதனை!

கொழும்பு, மே 7

கொழும்பு விமான நிலையத்திற்குச் செல்லும் வாகனங்களை தீவிர பரிசோதனைக்கு உட்படுத்துமாறு கட்டளையிடப்பட்டுள்ளது.

வாகனங்கள் வீதிகளில் நிறுத்தப்பட்டு சோதனை செய்யப்படும். அவ்வாகனங்களில் பயணம் செய்பவர்களும் சோதனைக்கு உட்படவேண்டும்.

பாதுகாப்புப் படையினரின் சோதனைக்கு உட்படும்போது ஏற்படும் வசதியீனங்களைத் தவிர்த்துக் கொள்ள தமது தேசிய அடையாள அட்டைகளை எடுத்துச் செல்லும்படி விமான நிலையம் செல்பவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

அதே சமயம் கட்டுநாயக்கா சுதந்திர வர்த்தக வலயத்திலும் அதனைச் சுற்றியும் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

வர்த்தக வலயப்பகுதிக்குள் செல்பவர்களையும், வாகனங்களையும் பொலிஸார் தீவிரமாக சோதனை செய்து வருகின்றனர். [ஒ-எ]

## மாநகரசபைக்கு நூல் அன்பளிப்பு

யாழ். மாநகரசபை நூலகத்துக்கு 400 அறிவியல் நூல்களை "ஏசியன் பவுண்டேசன்" வழங்கியுள்ளது. (ஒ-3)

## எதிரணி மேதின பேரணியில் உயிருடன் கறுப்புபூனைகள்!

### அரசு உயர் அதிகாரி அவதானிப்பு

கொழும்பு, மே 7

எதிர்க்கட்சியினர் கூட்டாக கொழும்பில் நடத்திய மேதினப் பேரணியில் உயிருடனான கறுப்புப் பூனைகளும் எடுத்துச் செல்லப்பட்டன.

சட்டத்தரணியின் கறுப்பு அங்கி அணிந்த ஒருவரை அடித்துத் துன்புறுத்துவது போன்ற காட்சியும் அருகில் பொலிஸ் உயர் அதிகாரி போன்று ஒருவர் நின்று கொண்டிருக்கும் காட்சியும் கொண்ட ஊர்தி ஒன்றும் பேரணியில் இடம்பெற்றது.

இன்னோர் ஊர்தியில் கண்கள் கட்டப்பட்ட நிலையில் இருந்த இளைஞன் ஒருவரின் நெற்றியில் இரு நபர்கள் துப்பாக்கியை வைத்தபடி நின்ற காட்சி இடம்பெற்றது.

மற்றோர் ஊர்தியில் அலங்கரிக்கப்பட்ட கதிரை ஒன்றுக்கு மந்திரவாதி ஒருவர் மந்திர உச்சாடனம் செய்யும் காட்சி இடம்பெற்றது.

அதன் பின்னால் வந்த ஊர்தியில் நடுத்தர உயரமுடைய தேசிய உடை அணிந்த ஒருவர் 'மந்திரிக்கப்பட்ட' கதிரையருகில் ஏதோ சைகை செய்துகொண்டு நிற்கக் காணப்பட்டார். அந்த ஊர்தி நகரத் தொடங்கியதும் அந்த நபர் சிம்மாசனம் போன்ற அந்த கதிரையில் ஏறி அமர்ந்துகொண்டார்.

இந்த ஊர்திகளை எல்லாம் பொரளை-கனத்தைக்கு முன்னால் நின்றபடி அரசின் உயர் பத்திரிகை அதிகாரி ஒருவர் அவதானித்துக் கொண்டிருந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது. [ஒ-எ]

## புலிகளைத் தடை செய்யுமாறு ஜெயலலிதா மீண்டும் வலியுறுத்து

சென்னை, மே 7

இந்தியாவில் விடுதலைப் புலிகள் இயக்கத்தை உடனடியாகத் தடை செய்ய வேண்டும் என்று இந்திய மத்திய அரசை முதலமைச்சர் ஜெயலலிதா மீண்டும் வலியுறுத்தி கேட்டிருக்கிறார்.

ராஜீவ் கொலையில் விடுதலைப் புலிகளின் சம்பந்தம் குறித்து போதுமான ஆதாரங்கள் கிடைக்காமல், அந்த இயக்கத்தை தடை செய்ய முடியாது என்று மத்திய உள்துறை அமைச்சர் சவான் அண்மையில் கருத்து வெளியிட்டதாகக் கூறப்படுவது சம்பந்தமாக செல்வி ஜெயலலிதா சென்னையில் அறிக்கை ஒன்றை வெளியிட்டார். அந்த அறிக்கையிலேயே அவர் மேற்படி கோரிக்கையை விடுத்தார்.

மத்திய புலனாய்வுக் கழகத்தின் சிறப்பு விசாரணைக் குழு விரிவான விசாரணைக்குப் பிறகு ஏராளமான ஆதாரங்களுடன் புலிகள் தலைவர் பிரபாகரன் ராஜீவ் கொலையில் ஒரு குற்றவாளி என்று அறிவித்துள்ளது.

விசாரணைக்காக பிரபாகரனை இந்தியாவிடம் ஒப்படைக்கும்படி இலங்கையிடம் இந்திய அரசு கேட்டுக் கொள்ள இருக்கிறது.

திரு. பத்மநாபா கொலையிலும் விடுதலைப் புலிகள் சம்பந்தப்பட்டிருந்ததற்கும் போதிய ஆதாரங்கள் தமிழகப் புலனாய்வுக் குழுவிற்குக் கிடைத்துள்ளன.

பட்டினம்காத்தான் காவல்துறை சோதனைத் தடை முகாமில் நடந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவத்திற்கும் விடுதலைப் புலிகளே பொறுப்பு என்பதும் தெரிய வந்துள்ளது.

வெளிநாடு ஒன்றில் இருந்து வந்து இந்திய மண்ணில் பயங்கரவாதச் செயல்களில் விடுதலைப் புலிகள் ஈடுபட்டு வந்துள்ளனர். அத்துடன் தமிழ்நாட்டில், குறுகிய நோக்கம் கொண்ட பிரிவினைவாத சக்திகளின் ஒத்துழைப்போடு தனித் தமிழ்நாடு பிரகடனம் செய்ய வேண்டும் என்று கூறி இந்தியாவின் ஒற்றுமைக்கே ஊறு விளைவிக்க விடுதலைப் புலிகள் முயற்சித்துள்ளனர்.

பெரும் அதிர்ச்சி அளிக்கும் வகையில் தமிழகத்தின் மூலை முடுக்கு எங்கும் ஊடுருவி, ஒன்றாகக் கலந்து, பயங்கரவாதச் செயல்களில் அவர்கள் ஈடுபட்டு வந்துள்ளனர்.

அண்மையில் திருப்பதியில் நடைபெற்ற அகில இந்திய காங்கிரஸ் மாநாட்டிலும் புலிகளை இந்தியாவில் தடை செய்ய வேண்டும் என்று மத்திய அரசைக் கேட்டுக் கொள்ளும் தீர்மானம் ஒன்றும் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. போதிய ஆதாரங்களின்றி இத்தகைய தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்க முடியுமா?

ராஜீவ் கொலையில் புலிகள் சம்பந்தப்பட்டிருப்பது உறுதியாகி விட்ட இந்நிலையில், அந்த இயக்கத் இந்தியாவில் தடை செய்யப்பட வேண்டும் என்றே இந்திய மக்கள் அனைவரும் விரும்புகிறார்கள்.

நாட்டின் நலன் கருதி விடுதலைப் புலிகளை உடனடியாகத் தடை செய்ய வேண்டும் — இவ்வாறு செல்வி ஜெயலலிதா அந்த அறிக்கையில் மேலும் தெரிவித்திருக்கிறார். [உ-த]

## விருப்பம் இல்லாதோர் இப்போதே விலகிவிடலாம்

### ஜனாதிபதி பிரேமா அறிவிப்பு

கொழும்பு, மே. 7

ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து வெளியேற விரும்புவோர் இப்போதே வெளியேறி விடவேண்டும். அப்போது தான் அடுத்த தேர்தலில் வாலையாவது பிடித்துக் கொள்ளும் சந்தர்ப்பம் கிட்டும்.

ஜனாதிபதி பிரேமதாஸா அம்பாந்தோட்டையில் நடந்த ஐ. தே. க. வருடாந்த மாநாட்டில் பேசுகையில் முன்கண்டவாறு கூறினார்.

'தேர்தல் சமயத்தில் வெளியேறலாம் என்ற எண்ணத்துடன் சிலர் எமது கட்சியில் இருப்பதாக எனக்குத் தகவல் கிடைத்துள்ளது. தேர்தல் தினம் அறிவிக்கப்பட்ட பின்னர் அவர்கள் வெளியேறினால் அவர்களுக்கு வால் கூட கிடைக்காது; வாலின் கீழ் இருந்து விழுபவை தான் கிடைக்கும் என்பதைசொல்லி வைக்க விரும்புகின்றேன்' —

இப்படி திரு பிரேமதாஸா மேலும் சொன்னார். [ஒ-எ]

## வவுனியா வருகிறார் பிரேமா

வவுனியா, மே 7

இம்மாத இறுதியில் வவுனியாவில் நடைபெறவுள்ள ஜனாதிபதி இடம்பெயர் சேவையின்போது ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசா அங்கு விஜயம் செய்யவுள்ளார்.

அவரது வருகையின்போது பொலிஸ் நிலையச் சந்தியில் ஆறு லட்ச ரூபா செலவில் அமைக்கப்பட்டு வரும் மணிக்கூண்டு கோபுரத்தையும் அவர் திறந்து வைக்க உள்ளார். [ஒ]

## வட - கிழக்கு அபிவிருத்திக்கு ரூ. 600 கோடி

மட்டக்களப்பு, மே 7

வடக்கு - கிழக்கு அபிவிருத்திக்கு 600 கோடி ரூபாவை உலக வங்கி ஒதுக்கியுள்ளது. இந்தப் பணத்தைக் கொண்டு வடக்கு - கிழக்கு மாகாணத்தில் பொருளாதார மந்த கதியை நாம் போக்க வேண்டும்.

இவ்வாறு மட்டக்களப்பு அரச அதிபரும், மாவட்ட ஆணையாளருமான திரு. மோனகுருசாமி தெரிவித்தார். [ஒ-த]

## பெண்களும் கடற்புலி அணியில்

கடற்புலிகளின் மகளிர் படைப் பிரிவு ஒன்றும் உருவாக்கப்பட்டுள்ளது.

கடற் புலிகளின் விசேட தளபதி திரு. சூசை இவ்வாறு தெரிவித்தார்.

கடற்புலிகளான கப்டன் ஜெயந்தன், கப்டன் சிதம்பரம் ஆகியோரின் நினைவஞ்சலிக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு சொன்னார். [ஒ-த]

## தமிழீழப் பெண்கள் ஆய்வு நிறுவனம் நோக்கங்களும் குறிக்கோள்களும்

தமிழீழப் பெண்கள் ஆய்வு நிறுவனம் ஒன்றை விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணி அமைத்திருக்கின்றது. அது தொடர்பாக மகளிர் முன்னணிப் பொறுப்பாளர் செல்வி ஜெயா வெளியிட்ட அறிக்கை இங்கு பிரசுரமாகின்றது.

கிளிநொச்சியில் கடந்த மார்ச் மாதம் 7, 8 ஆம் திகதிகளில் நடைபெற்ற தமிழீழப் பெண்கள் தேசிய மாநாட்டின் போது, பெண்கள் பிரச்சினை சம்பந்தமாக ஓர் ஆய்வு நிறுவனத்தை அமைப்பதென விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணி தீர்மானித்தது. இது மகளிர் முன்னணியின் வேலைத் திட்டத்தில் ஒரு முக்கிய அம்சமாகவும் இடம்பெற்றது.

### விஞ்ஞான ஆய்வு

காலம் காலமாக, பல நூற்றாண்டுகளாக, தமிழீழப் பெண்ணினம் சமூக, அரசியல், பொருளாதார ரீதியில் பல்வேறு ஒடுக்கு முறைகளைச் சந்தித்து வருகிறது. அரச பயங்கரவாத அடக்குமுறை ஒரு புறமும், தொடரும் போர்ச் சூழ்நிலையின் தாக்கங்கள் மறுபுறமும் பெண்களுக்கு எதிரான ஒடுக்கு முறையை மேலும் தீவிரப்படுத்தியிருக்கிறது. இந்த நெருக்கடியான சூழ்நிலையில் பெண்கள் எதிர்கொள்ளும் பிரத்தியேகமான பிரச்சினைகளை இனம்கண்டு, அவற்றிற்குத் தீர்வுகாணும் வகையில் வேலைத்திட்டங்களை அமைத்து, மகளிர் முன்னணி செயற்பட்டு வருகிறது; பெண்களின் பிரச்சிகளுக்குத் தீர்வு காணும் வகையில் ஆக்கபூர்வமானவேலைத் திட்டங்களை வகுத்து அவற்றை நடைமுறைப்படுத்துவதானால், முதலில் பெண்களை எதிர்நோக்கும் பிரச்சினைகள் விஞ்ஞான ரீதியில் ஆய்வு செய்யப்படவேண்டும். இந்த விஞ்ஞான ஆய்வின் அவசியத்தையும், தேவையையும்உணர்ந்தே ஓர் ஆய்வு நிறுவனத்தை அமைக்க மகளிர் முன்னணி முடிவு எடுத்தது.

இந்த ஆய்வு நிறுவனத்தின் நோக்கங்களும் குறிக்கோள்களும் வருமாறு:-

★ பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் சம்பந்தமான புள்ளி விவரங்கள், தரவுகள், பட்டறிவு விவரங்கள் ஆகியவற்றைச் சேர்த்து தொகுத்தல்.

★ சமூகவியல் ஆய்வுக்கான பிரச்சினைகளை இனம் காணுதல், [illegible] தெளிவான வரைவிலக்கணங்களை அமைத்தல்; ஆய்வு முறையை வகுத்தல்; வேலைத் திட்டங்களின் செயற்பாட்டுத் தன்மையைப் பரிசீலனை செய்தல்.

★ தமிழீழப் பெண்களின் சமூக, அரசியல், பொருளாதார வாழ்க்கை நிலையை ஆய்வு செய்து அறிதல்.

★ இந்த ஆய்வு நிறுவனம் தமிழீழப் பெண்கள் பற்றிய தகவல் மையமாகவும் செயற்படும்.

★ இந்த ஆய்வு நிறுவனம் சர்வதேசப் பெண்கள் ஆய்வு நிறுவனங்களுடனும், மற்றும் பெண் உரிமைக்காகப் போராடும் உலக மகளிர் அமைப்புகளுடனும் தொடர்புகளை ஏற்படுத்துச் செயற்படும்.

பொதுவாக பெண்கள் பற்றியும், குறிப்பாக தமிழீழப் பெண்கள் சம்பந்தமாகவும் ஆய்வு நூல்கள், கட்டுரைகள், சஞ்சிகைகள் மற்றும் ஆவணங்களை ஆய்வு நிறுவனத்துக்கு அன்பளிப்பு செய்ய விரும்புவோர், கல்வியங்காடு இராஜ வீதியில் உள்ள 'தமிழீழப் பெண்கள் ஆய்வு நிறுவனத்துக்கு' அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம். ★

பருப்பு, மிளகாய், வெங்காயம்

## இறக்குமதி ஏகபோக உரிமையை அரசு கைவிடும்?

கொழும்பு, மே 7

பருப்பு, செத்தல் மிளகாய் மற்றும் வெங்காயம் ஆகியவற்றை இறக்குமதி செய்யும் ஏகபோக உரிமையை கைவிடும் முடிவை அரசு விரைவில் அறிவிக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதாக கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று கூறுகிறது.

இப் பொருள்களின் இறக்குமதியை தாராளமயப்படுத்துவதன் மூலம் இப் பொருள்களின் விலைகளை குறைக்கலாம் என்று அரசு எண்ணுகின்றது

அரசின் புதிய கொள்கை இப் பொருள்களின் உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கு இது வரை வழங்கப்பட்டு வந்த பாதுகாப்பை இல்லாமற் செய்துவிடும் என்றும், உள்ளூர் உற்பத்தி இதனால் பாதிக்கப்படும் என்றும் வர்த்தக, வாணிப அமைச்சர் மன்சூரும், விவசாய அமைச்சர் விஜேரத்ன பண்டாவும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

இப்படி அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [இ-எ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கப்பலில் வந்த அரிசி, மா விற்பனையில் மந்தம்;

# அரச ஊழியருக்கு சம்பளம் வழங்க முடியாத நிலை

## செயலக அதிகாரிகள் திண்டாட்டம்

யாழ்ப்பாணம், மே 7

அரசாங்க ஊழியருக்கான சம்பளம், ஓய்வூதியருக்கான ஓய்வூதியம் மற்றும் சேவைக் கொடுப்பனவுகள் என்பவற்றை வழங்குவதற்கு நிதி வசதி இல்லாமல் யாழ் செயலக அதிகாரிகள் திண்டாடுகிறார்கள்.

அரசாங்கம் அனுப்பிவைத்த உணவுப் பொருள்கள் மற்றும் அத்தியாவசிய பொருள்களை விற்றுப் பணம் கிடைத்தாலே மேற்சொன்ன கொடுப்பனவுகளை வழங்கக் கூடியதாக இருக்கும் என்று செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஆனால் அதிகம் விற்பனையாகும் அரிசி, மா உட்பட்ட உணவுப் பொருள்கள் விற்பனையின்றித் தேங்கிக் கிடப்பதால் பணத்தைப் பெறுவது கஷ்டமாக உள்ளதாம்.

யாழ். மாவட்ட ஊழியர்களின் சம்பளப் பணம், ஓய்வூதியம் ஏனைய சேவைக் கொடுப்பனவுகளுக்கு மாதாந்தம் 10 கோடி ரூபாவுக்கு கொழும்பிலிருந்து கட்டு நிதி கிடைப்பது வழக்கம். இப்போது அந்த ஒழுங்கில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்துக்குத் தேவையான உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களை அனுப்புவதற்கு திறைசேரி 6 கோடி ரூபாவை அத்தியாவசிய சேவைகள் திணைக்களத்துக்கு வழங்குகிறது.

அதனால் மிகுதி 4 கோடி ரூபாவுக்கு மட்டுமே இப்போது கொழும்பிலிருந்து கட்டு நிதி அனுப்பப்படுகிறது.

இங்கு அனுப்பப்படும் பொருள்களை விற்பனை செய்வதன் மூலம் பெறப்படும் பணத்தை சம்பளம், ஓய்வூதியம் போன்ற கொடுப்பனவுகளுக்கு வழங்க திறைசேரி யாழ் அரச அதிபருக்கு அனுமதி வழங்கியுள்ளது.

ஆனால் குடாநாட்டில் பெரும்போக அரிசி சந்தைக்கு வந்து விட்டதால் கொழும்பிலிருந்து வரும் அரிசியை வாங்குவதில் மக்களின் நாட்டம் குறைந்துவிட்டது. கோதுமை மா விற்பனையும் மந்தமடைந்துள்ளது. அதேபோல வேறுபல பொருள்களும் அதிகம் விற்பனையாவதில்லை.

இதனால் செயலக அதிகாரிகள் சம்பளம், ஓய்வூதியம் ஆகியவற்றை எப்படி வழங்குவது என்று தெரியாமல் சங்கடப்படுகிறார்கள். (அ-3)

## செஞ்சிலுவை தினத்தில் இரத்ததானத்துக்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம், மே 7

உலக செஞ்சிலுவைத் தினம் நாளை மே மாதம் எட்டாம் திகதியாகும். அதனையொட்டி, இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாணக் கிளை தலைமை அலுவலகத்தில் நாளை பல சிறப்பு நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

காலை 9 மணிக்கு யாழ் போதனா வைத்தியசாலையிலும், மந்திகை அரசாங்க ஆஸ்பத்திரியிலும் செஞ்சிலுவைத் தொண்டர்கள் இரத்ததானம் செய்வர். தெரு நிகழ்வு, முதலுதவி ஆகியனவும் இடம்பெறும்.

செஞ்சிலுவை கிளைக் கொண்டாட்ட நிகழ்வுகள் முற்பகல் 11-30 மணிக்கு தலைமை அலுவலகத்தில் ஆரம்பமாகும்.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் பிரதிநிதி சிறப்புரை நிகழ்த்துவார்.

பிரதம விருந்தினராக பேராசிரியர் செ. சிவஞானசுந்தரம் (நந்தி) கலந்து கொள்வார்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள செஞ்சிலுவைச் சங்கப் பிரிவுக் கிளைகள் வழங்கும் இசை, நாடக, நடன நிகழ்ச்சிகள் விழாவில் இடம்பெறும். (அ)

## மரண அறிவித்தல்கள்

### கந்தையா மகேந்திரன் (றஞ்சன்)

சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும், மயிலணியை வசிப்பிடமாகக் கொண்டவருமான கந்தையா மகேந்திரன் [றஞ்சன், பிரபல வியாபாரி, சுன்னாகம்] காலமாகி விட்டார். அன்னார் சகுந்தலாதேவியின் அன்புக் கணவரும், காலஞ் சென்ற கந்தையா இராசம்மா ஆகியோரின் அன்பு மகனும், தர்சினி, விஜயகாந், டிலக்ஷா ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் ஆவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் இன்று [7-5-92] நண்பகல் 12-00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் கொத்தியாலடி மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
த சிவலிங்கம்,
[நண்பன்]

மயிலணி வடக்கு,
சுன்னாகம்.
[20563]

### கதிர்காமர் ஆசைப்பிள்ளை

சங்கானையைச் சேர்ந்த கதிர்காமர் ஆசைப்பிள்ளை அவர்கள் காலமாகி விட்டார். இவர் இராசம்மாவின் அன்புக் கணவரும், ஞானசேகரம் [ஞானம் ஆர்ட்ஸ் அன்ட் அட்வடைசிங்ஸ்], மகாலட்சுமி, சுந்தரமூர்த்தி [சீநோர்], ஜெயலட்சுமி, பத்மநாதன் [நீர்ப்பாசன திணைக்களம், வவுனியா], ஜெகதீசன் [சீநோர்], சந்திரசேகரம் [ஜேர்மனி], குணசேகரம் [நணம்] ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், ருக்மணி, கனகலிங்கம் [முன்னைநாள் முகாமையாளர், சபையர் சினிமா, கொழும்பு], தங்கராணி, சிவகுருநாதன், மல்லிகா, கமலா, ஜெயராணி, திலகராணி ஆகியோரின் அன்பு மாமனாரும், சிறீரங்கன் [அவுஸ்திரேலியா], வனிதா, மணிவண்ணன் [சுவிஸ்], சுபாஜினி, சங்கீதா, பிரதீபன், கீர்த்திராஜ், சுரேகா, தர்சினி, கிருபரன், கார்த்திகா, செந்தூரன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று [7-5-92] வியாழக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சங்கானை கரைச்சி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தயவுசெய்து ஏற்றுக்கொள்ளவும்.

நிகர வீதி,
சங்கானை கிழக்கு.
(20877)

தகவல் :
பொ. சிவகுருநாதன்
(மருமகன்)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 07 - 5 - 1992 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## 'சந்தன் கருணை' விரிவுரை

யாழ்ப்பாணம், மே 7

வண் - வட மேற்கு கோட்டையம்பதி ஸ்ரீ சிவசுப்பிரமணிய கோவில் அலங்கார உற்சவம் இன்று வியாழக்கிழமை ஆரம்பமாகி 16 ஆம் திகதி சனிக்கிழமை பூர்த்தியடையும்.

உற்சவ காலத்தில் தினமும் இரவு 7 மணிக்கு கானகதா வாரிதி பிரம்மஸ்ரீ வை. நித்தியானந்த சர்மா ''சந்தன் கருணை'' என்னும் பொருள் பற்றி தொடர் விரிவுரை நிகழ்த்துவார். (அ)

## இன்று

யாழ்ப்பாணம், மே 7

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழு நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இரண்டாம் சுற்று ஆட்டங்களில் இன்று சென். அன்ரனீஸ் அணியை எதிர்த்து நவசக்தி அணி மோதுகிறது. இன்று மாலை நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் இந்த ஆட்டம் நடைபெறும். (உ)

## மறியல் போராட்டம்

தென்மராட்சி, மே 7

இரண்டு ஆசிரியைகள் திடீரென இடமாற்றம் செய்யப்பட்டதை ஆட்சேபித்து மாணவர்களும் பெற்றோர்களும், பாடசாலை முன்பாக மறியல் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

மிருசுவில் வடக்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலையிலேயே மறியல் போராட்டம் இரண்டாம் தவணை ஆரம்ப தினம் [திங்கட்கிழமை] தொடக்கம் நடைபெற்று வருகிறது.

இரண்டாம் தவணையில் ஆசிரியைகளுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டதனால் மாணவர்களின் கல்வி பாதிக்கப்படும் என்பதைச் சுட்டிக்காட்டியே மறியல் போராட்டம் நடத்தப்படுகிறது. [சு-117]

## விரிவுரைக்கு திரும்பினர்

யாழ்ப்பாணம், மே 7

சித்த மருத்துவ மாணவர்கள் சுமார் ஒரு மாதகாலமாக நடத்தி வந்த போராட்டம் கைவிடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சித்த மருத்துவத்துறைத் தலைவர், கலைப்பீடாதிபதி, துணைவேந்தர் ஆகியோர் சித்த மருத்துவ மாணவர்களுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளை அடுத்து கருத்து வேறுபாடுகள் நீங்கி இருப்பதாக [illegible] மருத்துவ மாணவர் [illegible] (இ)

## அமெரிக்க - இந்திய கடற்படைப் பயிற்சி நடந்தே தீருமாம்

புதுடில்லி, மே 7

அமெரிக்க - இந்திய கூட்டுக் கடற்படைப் பயிற்சிகளை மேற்கொள்ளும் தீர்மானத்தில் இருந்து பின்வாங்குவது என்ற பேச்சுக்கே இடமில்லை.

மத்திய பாதுகாப்பு அமைச்சர் சரத்பவார் நேற்று இதனை ராஜ்யசபையில் தெரிவித்தார்.

அமெரிக்காவுடன் இந்தியா கொண்டிருக்கும் சில கருத்து வேறுபாடுகள் கூட்டுக் கடற்படைப் பயிற்சித் திட்டம் செயல்படுத்துவதை பாதிக்கா என்றும் அமைச்சர் சொன்னார். [இ-எ]

## கடற்புலிகளின்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

உரையாற்றுகையில், ''இன்று விடுதலைப் புலிகள் கடற்படைப் படகுகள் மீதான பல தாக்குதல்களை நடத்தியுள்ளனர். இது ஸ்ரீலங்கா அரசுக்குப் பெரும் தலையிடியைக் கொடுத்துள்ளது. கடற் புலிகளின் தோற்றத்தால் விடுதலைப் போராட்டம் புதிய பரிமாணம் எடுத்துள்ளது'' என்றார்.

மன்னார் மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. அமுதன், யாழ்ப்பாண மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி ஆகியோரும் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றினர்.

இந்த நினைவஞ்சலிக் கூட்டத்தையும் பரிசளிப்பு விழாவையும் திருகோணமலை மாவட்ட விசேட தளபதி திரு. குணம், மன்னார் மாவட்ட விசேட தளபதி திரு சுபன் ஆகியோர் மங்கல விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தனர்.

கடற்புலிகளின் மகளிர் படைப் பிரிவுப் பொறுப்பாளர் செல்வி நளாயினி தலைமையில் இடம்பெற்ற இவ்விழாவில் இருநாட்களாக நடைபெற்ற கடல் விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிபெற்ற வீரர்களுக்கும் விளையாட்டுக்கழக உறுப்பினர்களுக்கும் கடற்புலிச் சின்னம் பொறிக்கப்பட்ட பதக்கங்களை மாவீரரின் குடும்பத்தினர் அணிவித்தனர்.

பல்வேறு மாவட்ட விடுதலைப் புலிகளின் தளபதிகளும் விடுதலைப் புலிகளின் பிரமுகர்களும் வெற்றி பெற்றவர்களுக்கான சான்றிதழ்களை வழங்கினர்.

## நகரசபை முன்னாள் ஊழியர்

குரும்பசிட்டியை வதிவிடமாகக் கொண்ட காலஞ்சென்ற செல்லையா சின்னத்துரை சாவகச்சேரி நகரசபையில் களஞ்சியப் பொறுப்பாளராகப் பணிபுரிந்து இளைப்பாறியவர் ஆவார்.

நேற்றைய 'உதயனில்' வெளியான அவரது மரண அறிவித்தலில் நகரசபை என்ற சொல் விடுபட்டு போயிற்று.

## 8 தனியார் வங்கிகளின் ஊழியருக்கு சம்பள உயர்வு

கொழும்பு, மே 7

இலங்கையிலுள்ள 8 தனியார் வங்கி ஊழியர்களுக்கு சம்பள உயர்வு, காப்புறுதிப் பாதுகாப்பு, சேமலாப நிதி அதிகரிப்பு, மருத்துவ உதவிகள், ஓய்வூதியம் ஆகியவை வழங்கப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் முதலாம் திகதி இலங்கை வங்கி ஊழியர்கள் சங்கத்திற்கும் ஊழியர்கள் சம்மேளனத்திற்கும் இடையில் உருவான கூட்டு ஒப்பந்தம் ஒன்றை அடுத்தே இம்முடிவு எடுக்கப்பட்டது.

வர்த்தக வங்கி ஹட்டன் நஷனல் வங்கி, இந்தியன் வங்கி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, ஹபீப் வங்கி, இந்தியன் ஸ்டேட் வங்கி, சார்ட்டட் வங்கி, ஹொங்கொங் வங்கி ஆகியவையே இவ்வாறு நன்மையடையக் கூடிய எட்டு வங்கிகளும் ஆகும்.

கடந்த மாத முற்பகுதியில் இவ்வங்கி ஊழியர்கள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து தமது வேலைத் தலங்களில் இருந்து வெளிநடப்புச் செய்தனர். அடுத்த கட்ட நடவடிக்கை வேலை நிறுத்தத்தில் இறங்கி, தொழிற்சங்க நடவடிக்கைகளை மேற்கொள்ளப் போவதாகவும் அவர்கள் எச்சரித்திருந்தனர்.

அதனைத் தொடர்ந்தே இந்தக் கூட்டு ஒப்பந்தம் உருவானது. [ஒ-த]

## மட்டக்களப்புப் பகுதி

## கொலை கொள்ளைகளுக்கு ஊர்காவல் படை காரணம்

மட்டக்களப்பு, மே 7

''மட்டக்களப்பு கரபொல, முத்துகல கிராமங்களில் இடம்பெற்ற கொலை, கொள்ளைகளுக்கு ஊர்காவல் படையினரே காரணம். அவர்களை எம்மால் அடையாளம் காட்ட முடியும்''

கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த தமிழ் அரசியல் வாதிகள், பாதுகாப்பு அதிகாரிகள் சகிதம் சென்ற சமயம் அங்குள்ள மக்கள் அவர்களிடம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஊர்காவல் படையைச் சேர்ந்தவர்களே இந்த நடவடிக்கையில் ஈடுபட்டனர் என அழுதவண்ணம் பலரும் முறையிட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது. [இ-3]

## டில்லியில் பத்திரிகையாளர் ஆர்ப்பாட்டம்

புதுடில்லி, மே 7

தமிழ்நாடு சட்டசபை பத்திரிகையாளர்களுக்கு 'வாரண்ட்' பிறப்பித்ததை ஆட்சேபித்து புதுடில்லியில் நேற்று பத்திரிகையாளர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர். (இ)

## பார்வையாளர் அரங்கு இடிந்து 20 பேர் பலி!

பாரிஸ், மே 7

பார்வையாளர் அரங்கு இடிந்து விழுந்ததால் 20 பேர் கொல்லப்பட்டனர். 700 பேர் வரை காயம் அடைந்தனர்.

பிரான்ஸுக்குச் சொந்தமான மத்திய தரைக்கடல் தீவான கோஷிக்காவில் நேற்று நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் இச்சம்பவம் இடம்பெற்றது. [இ 10]

## கிணற்றில் விழுந்து குழந்தை பலி!

தென்மராட்சி, மே 7

தள்ளு வண்டிலுடன் விளையாடிக் கொண்டிருந்த இரண்டு வயது ஆண் குழந்தை நில மட்டத்துடன் இருந்த கிணற்றில் தவறி வீழ்ந்து மரணமானதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இயக்கச்சி சங்கத்தார் வயலில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் க. விஜயராஜ் என்ற குழந்தையே மரணமானது. [ஒ-117]

## 21 ஆம் திகதிக்கு..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

இதற்கிடையில், ராஜீவ் காந்தியின் முதலாவது நினைவு தினமான எதிர்வரும் 21 ஆம் திகதி இந்தியாவில் தீவிரவாதத்துக்கு எதிரான இயக்கம் ஒன்றை இந்திரா காங்கிரஸ் ஆரம்பிக்கத் திட்டமிட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

காங்கிரஸின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான குலாம் நபி ஆஸாத் இதனை நேற்று வெளியிட்டார். [இ-எ]

## தமிழினத்தின்..

[1 ஆம் பக்கம் தொடர்ச்சி]

தமிழீழத்தின் ஒவ்வொரு அங்குல நிலத்திலும் இருந்தும் இசை எழவேண்டும். தமிழீழம் மலரும் நாளில் இங்கிருந்து எழும் இசை உலகை வெல்ல வல்லதாக இருக்க வேண்டும். அதற்கான நிலையைக் கலைஞர்கள் உருவாக்க வேண்டும்—என்று கூறினார்.

விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியின் செயலதிபர் திரு. போசுரத்தினம் யோகி பேசுகையில் தெரிவித்ததாவது:-

எமது கலைஞர்கள் தமிழீழத்தின் தேசிய விடுதலை இயக்கத்துடன் இணைய வேண்டும்.

ஆடலும், பாடலும், போராடலும் எம் உயர்ச்சிக்கான அறிவியல் தேடலும் தாயக மண் மீட்புக்காக ஒன்று கூடலும் வரும் நாளிலும் தொடரட்டும்.

மண் இன்றேல் இசை இல்லை என்பதை நினைவு கூர்வோம்.

தமிழர்கள் இசையை மதம் சார்ந்த சொத்தாகக் கருதாமல் இனம் சார்ந்த சொத்தாகக் கருதவேண்டும். தமிழீழ மக்கள் கிறிஸ்தவர்களாக இருந்தாலும், இந்துக்களாக இருந்தாலும் மொழியால் ஒன்றுபட்டு நிற்க இசை துணையாகும்.

உலகில் மனிதனாகப் பிறப்பது சிறந்தது. அதிலும் தமிழனாகப் பிறப்பது பெருமையானது. தமிழினம் மீண்டும் எழுச்சி கொண்ட காலத்தில் வாழ்வது இவை அனைத்தையும் விட சிறப்பானது.

முத்தமிழ் விழா, தமிழிசை விழா போன்ற விழாக்களுடன் தமிழீழக் கலைஞர்கள் ஒன்றுபட்டு நெருங்கிச் செயற்படுவதை காண்கிறோம். இன்னமும் எட்ட நிற்கின்றவர்களை கிட்ட வாருங்கள் என தமிழீழம் இரு கைகளாலும் வரவேற்கிறது. — என்றார்.

பேராசிரியர் கா. சிவத்தம்பி வாழ்த்துரை வழங்கி உரை நிகழ்த்தினார்.

நேற்றைய நிகழ்ச்சிகளை கேட்டு இன்புறுவதற்கு பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்டிருந்தனர்.

கலை, பண்பாட்டுக் கழகத்தைச் சேர்ந்த திரு. தேவர் நன்றியுரை வழங்கினார். [அ-5 161]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org